## வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை

**மானியக் கோரிக்கை எண்.26**

## அறிவிப்புகள்

## 2016–2017

**உடுமலை K. ராதாகிருஷ்ணன்**

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்**

## வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

### அறிவிப்புகள் 2016–2017

**1. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு சொந்தமான மூன்று வணிக வளாகங்களை இடித்து விட்டு புதிதாக வணிக வளாகங்கள் கட்டுதல்.**

சென்னையில் சாஸ்திரி நகர், பெசன்ட் நகர் மற்றும் அசோக்நகர் ஆகிய இடங்களில் உள்ள வணிகவளாக கட்டடங்களை இடித்து விட்டு **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** அதிகபட்ச தரைப்பரப்பு குறியீட்டின்படி (FSI) நவீன வசதிகளுடன் கூடிய வணிக / அலுவலக மற்றும் குடியிருப்பு வளாகங்களை 128.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும்.

**2. தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகளில் சிறப்பு பழுதுபார்ப்புப் பணி.**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகளின் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இக்குடியிருப்புகளை, குடியிருக்க தகுதியுள்ள நிலையில் பராமரிக்க, **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் 2016–2017 ஆம் ஆண்டில் 20.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு மாவட்டங்களில் உள்ள தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகளில் சிறப்பு பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.



**3. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் புதிய தொழில்நுட்பம் மற்றும் தொழில் நுட்பமில்லாத 277 பணியாளர்களைப் பணியமர்த்துதல்.**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் வாரியப் பணியாளர்கள் அதிக அளவில் ஓய்வு பெற்றதால், வாரியத் திட்டங்கள் மற்றும் அன்றாடப் பணிகள் தடையின்றி செயல்படுத்தும் நோக்கில் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** 2016–2017 ஆம் ஆண்டில் நேரடி நியமனமுறை மூலம் பின்வரும் தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பமில்லாத பணியாளர்கள் பணியமர்த்தப்பட உள்ளனர்.

| | | |
|---|---|---|
| (அ) | உதவி பொறியாளர்கள் | 25 |
| (ஆ) | நில அளவையாளர்கள் | 19 |
| (இ) | இளநிலை வரைவு அலுவலர்கள் | 19 |
| (ஈ) | தொழில் நுட்ப உதவியாளர்கள் | 76 |
| (உ) | இளநிலை உதவியாளர்கள் | 126 |
| (ஊ) | தட்டச்சர்கள் | 12 |

**4. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் அபிவிருத்தி செய்யப்பட்ட வீட்டுவசதி அலகுகள் மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகளை நிகழ்நிலைப்படுத்துதல் (Online) மற்றும் அதற்கான மாதத் தவணை மற்றும் வாடகையினை நிகழ்நிலையில் (Online) செலுத்தும் வசதியினை ஏற்படுத்துதல்.**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் திட்டங்களில் ஒதுக்கீடு பெற விண்ணப்பம் சமர்ப்பித்தல், ஒதுக்கீடு செய்தல், வீடு மற்றும் குடியிருப்புகளை ஒப்படைப்பு செய்தல், ஒதுக்கீடு பெற்றதற்கான தொகை, மாத தவணைத் தொகை மற்றும் வாடகைத் தொகையை வசூலிப்பது ஆகியவற்றை நிகழ்நிலை வசதி (Online facility) வாயிலாக செய்யவும் மற்றும் வீட்டுவசதி வாரியத்தின் அனைத்துத் திட்டங்கள் மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள் ஒதுக்கீடு ஆகியவற்றிற்கும், மேற்கூறிய இனங்களில்



பெறப்படும் தவணைத் தொகை, வாடகை வசூல் ஆகியவற்றை நாள்தோறும் கண்காணிக்கவும் மற்றும் இவற்றில் தவறு ஏதும் ஏற்படின் அதனை சரிசெய்யவும் வழிவகை செய்யப்படும்.

**5. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் குடியிருப்புகளில் பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்புப் பணி.**

ஐந்தாண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட அல்லது கடந்த ஐந்தாண்டுகளில் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படாத அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** வெள்ளை அடித்தல் மற்றும் வர்ணம் பூசுதல் உள்ளிட்ட பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள் 20.00 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் மேற்கொள்ளப்படும்.



**6. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் கடன் வழங்கல் மற்றும் வசூலிப்புப் பணிகளை கணினி மயமாக்குதல்.**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் மூலம் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்படும் கடன் பட்டுவாடா மற்றும் கடன் வசூலித்தல் பணிகள் நிகழ்நிலை வசதி (online facility), மூலமாக அன்றாடம் கணக்குகளை கணினி–மயமாக்கப்பட்டு, சங்கத்திற்கு அடமானம் செய்துள்ள கடன்தாரர்களின் அனைத்து சொத்துக்களின் அமைவிடம் குறித்து புவிசார் குறியீட்டின்படி (Geo-tagging) சேகரிக்கப்பட்டு, கடன்தாரர்கள் தங்களது கடனை நேரடியாக நிகழ்நிலை வசதி மூலமாகவோ அல்லது வங்கி கிளையிலோ திருப்பி செலுத்துவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்படும். இதனால் கடன் வழங்குவது

மற்றும் திருப்பி செலுத்துவதை முறைபடுத்துவதுடன், திருப்பி செலுத்தாத கடன்தாரர்கள் மற்றும் முறையாக பராமரிக்கப்படாத கணக்குகள் ஆகியவற்றை தினந்தோறும் கண்காணித்து கடன்கள் தவறாமல் திருப்பி செலுத்தப்படுவதை உறுதி செய்யும் வகையில் சீரிய நடவடிக்கை மேற்கொள்ள வழிவகை செய்யப்படும்.



**7. 10 முதன்மை கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களின் வணிக செயல்பாட்டினை புதுப்பிப்பதற்காக இலகு ரக கடன் மூலம் நிதியுதவி அளித்தல்**

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம், 10 முதன்மை கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களைக் கண்டறிந்து, அச்சங்கங்களின் வணிக செயல்பாட்டினை புதுப்பித்து அவைகளை சாத்தியமிக்க சங்கங்களாக உருவாக்கும். மேலும், இந்த முதன்மை கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களின் வணிக செயல்பாட்டினை புதுப்பிப்பதற்காக அவைகள் ஒவ்வொன்றிற்கும் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** கலைப்பு நிதியிலிருந்து (liquidation fund) **30.00** இலட்சம் ரூபாய் இலகு ரக கடனாக வழங்கப்படும்.

**8. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் ஊழியர்களை தமிழ்நாடு அரசின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் கொண்டு வருதல்.**

அரசு அறிவித்துள்ள மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தினை **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கப் பணியாளர்களுக்கும் விரிவுபடுத்தப்படும். மேலும், பணியாளர்–களுக்கான கட்டணத்தை கூட்டுறவு வீட்டுவசதி இணையமும், கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களும் ஏற்றுக்கொள்ளும்.



**9. நாமக்கல், நாகப்பட்டினத்தை கூட்டு உள்ளூர் திட்டக் குழுமமாக அறிவித்தல் மற்றும் கும்மிடிப்பூண்டி கூட்டு உள்ளூர் திட்டப் பகுதியை விரிவாக்கம் செய்தல்.**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** நாமக்கல் மற்றும் நாகப்பட்டினத்தை சுற்றியுள்ள கிராமங்களை இணைத்து அவற்றின் எல்லைகளை விரிவுபடுத்தி கூட்டு உள்ளூர் திட்டக் குழுமமாக அறிவிக்கப்படும். மேலும், கும்மிடிப்பூண்டி கூட்டு உள்ளூர் திட்டக் குழுமப் பகுதியைச் சுற்றியுள்ள கிராமங்களை இணைத்து விரிவாக்கம் செய்யப்படும்.

**10. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திலுள்ள வரைபடம் மற்றும் ஆவணங்களை கணினிவழிப் பிரதி எடுத்தல்.**

திட்ட அனுமதி வழங்கப்பட்ட வரைபடம் மற்றும் ஆவணங்கள் குறுகிய ஆயுளை உடையதாலும், கரையான் மற்றும் பூச்சிகளால் சிதிலமடையும் என்பதாலும் அவற்றின் எதிர்காலத் தேவையினை கருத்தில் கொண்டு **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி**, 1.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அவைகளை கணினிவழிப் பிரதியெடுக்கும் (Digitization) திட்டத்தை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மேற்கொள்ளும். சட்ட சிக்கல்களில் தீர்வு காணவும், கட்டி முடிக்கப்படும் கட்டடங்கள் திட்ட அனுமதியின்படியே கட்டப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்யவும், வருங்காலங்களில் பொது மக்கள் வேண்டும்போது அவற்றின் பிரதிகளை எளிதாக வழங்கவும், மேலும் தகவல் அறியும்



உரிமைச் சட்டத்தின்கீழ் முக்கியமான ஆவணங்களைப் பாதுகாக்க வேண்டியுள்ளதாலும் கணிணிவழிப் பிரதி எடுத்தல் அவசியமாகின்றது. இவ்வாறு கணினிமயமாக்கப்படும் தகவல் தொகுப்பு எதிர்காலத் திட்டமிடுதலுக்கும் பெரிதும் பயன்படும். இத்திட்டத்திற்கான செலவினம், திட்ட அனுமதி வரைபட நகல் மற்றும் பிற ஆவணங்களைப் பெறும் பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்படும் கட்டணங்கள் வாயிலாக முழுவதுமாக மீளப் பெறப்படும்.